OS.No. 54/2015

Dated : 07.11.2023

Time: 03.20 p.m to 03.45 p.m

P.W- 1 சாட்சி புஷ்பா மனுவின் பேரில் திரும்ப அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு வாதி சார்பாக குறுக்கு விசாரணை செய்யப்பட்டார்.

குறுக்கு விசாரணை:

என்னுடன் பிறந்தவர்கள் தனக்கோடி, பிச்சையம்மாள், தெத்தியம்மாள் ஆவார்கள். நான் அது சம்மந்தமான வாரிசு சான்றிதழை ஒப்படைத்துள்ளேன். தனபாக்கிம் என்னுடன் பிறந்தவர் அல்லர். சர்வே எண்.105/4, 105/1 ஆகிய சொத்துக்கள் தவிற மற்ற அணைத்தும் என் மாமனாரின் தகப்பனார் கோவிந்தன் என்பவரின் சொத்து என்றால் சரிதான். அவர் இறந்த பிறகு அவருடைய மகன்கள் முத்துசாமி, பெருமாள் இடையே எந்த பாகமும் ஏற்படவில்லை என்றால் சரியல்ல. நான் சொல்வதுபோன்று பாகம் எதுவும் ஏற்படவில்லை என்றும் அதனால் தான் அந்த பாக பத்திரத்தை நீதிமன்றத்தில் ஒப்படைக்கவில்லை என்றால் சரியல்ல. தாவா சொத்து குறித்த அடங்கலை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை.

மேலும் முத்துசாமி, பெருமாள் மற்றும் அவர்களுடைய வாரிசுகள் யாருமே இதுநான் வரை அந்த சொத்துக்கள் குறித்து எவ்வித பாகமும் ஏற்படுத்திக்கொள்ளவில்லை என்றால் அது தவறு. அதனால் தான் அந்த பாக பத்திரத்தை நீதிமன்றத்தில் ஒப்படைக்கவில்லை என்றால் சரியல்ல. எனக்கு 55 ஆண்டுகளுக்கு முன்பு திருமணம் நடைபெற்றது. அதற்கு பின்பு தாவா சொத்து யாருக்கு பாத்தியப்பட்டது என்று தெரியாது. மேற்படி இரண்டு குடும்பத்தின் மூத்தவர் துரைசாமிதான். பிவாசாஆ.1 , 2 ஆகியவற்றில் கண்டுள்ள சொத்து குடும்பத்தின் மூத்தவர் என்பதால் குடும்ப வருமானத்தை கொண்டு துரைசாமி பெயரில் கிரயம் வாங்கப்பட்டது என்றும் அது அவருடை தனிப்பட்ட சொத்து அல்ல. அது குடும்ப சொத்து தான் என்றால் அது தவறு.

எனக்கு எழுத படிக்க தெரியாது. என்னுடைய முதல் விசாரணையில் உள்ள விவரங்கள் எனக்கு தெரியாது என்றால் தெரியாது, ஞாபகம் இல்லை. பட்டா எண். 126 ல் உள்ள சொத்துக்கள் அணைத்துமே பொது குடும்ப சொத்துதான் என்றும் அது துரைசாமியின் தனிப்பட்ட சொத்து அல்ல என்றும் சொன்னால் அவங்களுக்கு பாதி எங்களுக்கு பாதி. மேற்படி துரைசாமி எழுதி வைத்த உயிலான பிவாசாஅ.16 உள்ள சொத்துக்கள் எனக்கு பூர்வீகமாகவும் பட்டா மூலம் பாத்தியம் என்றும் சொன்னால் சரிதான். அதில் கிரயம் மூலம் வந்ததாகவோ,

வாய்மொழி பாகம் மூலம் வந்ததகாகவோ சொல்லவில்லை. துரைசாமியின் மனைவி என் அக்கா ஆனால் உடன் பிறந்த அக்கா இல்லை என் தகப்பனாரின் மற்றொரு மனைவி மூலம் பிறந்தவர். ஆனால் என் மனைவியின் உடன் பிறந்த சகோதரிக்கு எழுதி வைப்பதாகதான் உயிலில் உள்ளது.

மேற்படி துரைசாமியின் மனைவி என் தகப்பனாரின் மற்றொரு மனைவி மூலம் பிறந்தவர் என்பதை வழக்கில் நான் எங்கும் கூறவில்லை. மேற்படி குடும்ப சொத்தை தனிப்பட்ட முறையில் உயில் எழுதி வைக்க துரைசாமிக்கு உரிமை இல்லை என்றும் எனவே எல்லா சொத்துகளையும் பொதுவில் பாதி பாகம் என அவர் ஏற்படுத்திக்கொடுத்தது செல்லாது, வாதியின் பாகத்தை அது கட்டுப்படுத்தாது என்றால் சரிதான். உயிலில் உள்ள சாட்சிகள் வெளியூரை சேர்ந்தவர்கள். என் மாமனாருக்கு தெரிந்தவர்கள். மேற்படி வாதியின் பாகத்தை ஏமாற்றுவதற்குதான் வெளியூர் ஆட்களை வைத்து உயிலை தயாரித்துக்கொண்டோம் என்றால் அது தவறு. வாசாஆ.5 ன் கீழ் தாவா சொத்தின் 2 சர்வே எண் சொத்துக்களை 3ம் பிரதிவாதி பெரியசாமிக்கு நான் விற்பனை செய்துள்ளேன்.

அந்த கிரய பத்திரத்தில் பூர்வீகமான சொத்து என்று தான் காண்பிக்கப்பட்டது என்றும் உயில் மூலம் வந்தது என எங்கும் சொல்லப்படவில்லை என்றால் அது பற்றி ஞாபகம் இல்லை. நான் வழக்கிற்காக பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல. மேற்படி சர்வே எண்.111 -1 ஏ ல் உள்ள சொத்து எங்களுக்கு எந்த ஆவணத்தின் படியும் பாத்தியப்படவில்லை என்றும் வாதிக்கும் 1ம் பிரதிவாதிக்கும் பாத்தியப்பட்ட பொது குடும்ப சொத்தை 3ம் பிரதிவாதிக்கு விற்பனை செய்தது செல்லாது வாதியை கட்டுப்படுத்தாது என்றால் சரியல்ல. அதே போல் தாவா சொத்தில் தார்சு வீடு உள்ளதாகவும் அது துரைசாமிக்கு மட்டும் பாத்தியப்பட்டதாகவும் அதில் நான் தான் குடியிருந்து வருகிறேன் என்றும் அதனுடைய சர்வே எண் விஸ்தீரணம் தெரியுமா என்றால் ஞாபகம் இல்லை. அதுவும் பாகம் பிரியாத குடும்ப சொத்து என்றும் அது கூட்டு பாட்டாவில் உள்ளது என்றும் சொன்னால் சரியல்ல. அது மாசாஆ.2 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. அந்த வீட்டில் வாதியும் குடியிருக்கிறார் என்றால் அது தவறு. 4ம் இண சொத்து சம்மந்தமான வருவாய் ஆவணங்களை முன்நிறுத்தவில்லை.

என்னால்/ என் முன்பாக மேற்படி சாட்சியம் பதியப்பட்டு, சாட்சிக்கு பொருள் விளக்கப்பட்டு/ படித்து காண்பிக்கப்பட்டு, அது சரி என அவரால் ஒப்புக்கொள்ளப்பட்டது."

**Sd/- K.Ananthan,**
**Subordinate Judge,**
**Attur.**